(3) ஒத்திவைப்புத் தீர்மானம்

(அ) மைசூர் மாநில அரசு ஹேமாவதி, சொர்ணமுகி ஆறுகளில் அணை கட்ட இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில் மைசூர் மாநில அரசு ஹேமாவதி, சொர்ணமுகி ஆகிய ஆறுகளில் அணைகள் கட்டவேண்டுமென்று இருப்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்பதால் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து பேசி அதற்கு முடிவெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாலும், இதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது தங்களுடைய கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்பு இருப்ப தாலும் நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மைசூர் மாநிலத்தில் மதுரையிலிருந்து சென்ற தமிழ்நாட்டு மக்களைத் துன்புறுத்தப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. சித்தன் அவர்களும், மைசூர் மாநிலத்தில் மதுரையிலே இருந்து சென்ற தமிழ் நாட்டு மக்களை ஜனவரி 31-ம் நாளன்று அடித்துத் துன்புறுத்தியதுபற்றிய நிகழ்ச்சிபற்றி விவா திக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமெனக் கோரி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்பற்றி நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, அதற்கு அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் போதிய பாது காப்புக் கொடுக்கப்படும் என்று பதில் எழுதியிருக்கின்ற காரணத் தினாலும், மேலும் இதுகுறித்துக் கூறவேண்டுமானால் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற இருக்கின்ற விவாதத்தின்போது பேசுவதற்கு அவர்களுக்குப் போதுமான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும் நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு

தஞ்சை மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உணவு தானியக் கட்டுப்பாட்டை நீக்கியதால் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி தஞ்சை உழவர்கள் அச்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சி. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றைக் கொண்டுவருவார்கள்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கிய மான கீழ்க்கண்ட காரியத்தை நான் மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தஞ்சாவூர் மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங் களிலும் உணவு தானியங்கள் மீதான கட்டுப்பாட்டை நீக்கியதன் விளைவாக ஆலைச் சொந்தக்காரர்கள், நெல்லை உடனடியாகக் கொள் முதல் செய்ய முன்வரமாட்டார்களென்றும், அதன் விளைவாக உழ வர்களிடத்தில் இருப்பு தேக்கமடையுமென்றும், நெல் குறித்துச் சரியான விலையை அவர்கள் பெற மாட்டார்களென்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உழவர்கள் அச்சமுற்றுள்ளதால் இச் சூழ்நிலை யைத் தவிர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலை வீழ்ச்சி ஏற்படாமலிருக்கவும், விவசாயிகளிடம் நெல்லிருப்பு அதிக அளவில் தேக்கம் அடையாமல் தடுக்கவும், நெல் வாங்கும் கொள்முதல் மையங்கள் ஏற்படுத்துவதுபற்றி யோசிக்கப்பட்டு, அரசினரே கொள்முதல் செய்வதற்குரிய ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ள. இந்த ஏற்பாட்டின்படி, இந்திய உணவுக் கூட்டு நிறுவனமும், தஞ்சாவூர்க் கூட்டுறவு விற்பனை சங்கமும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்துள்ள கொள் முதல் விலைக்கும் குறைவாக, விவசாயிகள் அஞ்சுவது போல் பொதுச் சந்தை விலைகள் சரியுமானால், விவசாயிகள் இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்தின் 325 சேகரிக்கும் மையங்களிலோ அல்லது 500-க்கும் மேற்பட்ட கிராமங்களிலுள்ள தஞ்சாவூர்க் கூட்டுறவுவிற்பனைச் சங்கத்தின் தனியான கிளைகளிலோ கொடுத்து, அவர்களுடைய நெல்லிற்குக் கட்டுப்பாட்டு விலையில் பணம் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தவிர, தாலுகா சப்ளை அதிகாரி கள் மூலமாகவும், சிவில் சப்ளை இலாகாவின் அங்கீகாரம் பெற்ற ஆலைக்காரர்கள் மூலமாகவும் கொள்முதல் விலையில் நெல் வாங்கப் படும். இதைத் தவிர, தேவையெனில் அரசு அங்கீகாரம் பெற்ற மொத்த வியாபாரிகளும் நியமிக்கப்படுவார்கள். அதனால் விவசாயி களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் அரசுக்கு நெல் கொடுப்பதில் எவ் வித சிரமமும் இருக்காது. இந்த நடவடிக்கைகள் வியாபாரிகள் தஞ்சையிலிருந்து நெல் எடுத்துச் செல்வதில் மந்தம் ஏற்பட் டாலும், அல்லது விலைகள் குறைந்தாலும் அவைகளைத் தவிர்த்து நிலையைச் சீர்படுத்தும்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இப்பொழுது வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய வர்கள் சிவில் சப்ளை இலாகாவுக்கு நெல் போட்டால்தான் வெளி

மாவட்டத்திற்கு 50 சதவிகிதம் எடுத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. அதே போன்று கூட்டுறவு நாணயச் சங்கங்களிலேயும் நெல் போட்டால் 50 சதவிகிதம் வரை வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்ற உத்திரவை அரசாங்கம் பிறப்பிக்க யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்திற்கும் கூட்டு நிறுவனத்திற்கும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே விலை ஏறாமல் இருக்க கிளைச் சங்கங்களிலே கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்களும் வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கோருவார்களானால் அது கவனிக்கப்படும்.

(ஆ) புதுக்கோட்டைப் பகுதியில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. பொன்னம்பலம் அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பகுதியில் (ஆலங்குடி, திருமயம், குளத்தூர் வட்டங்களில்) விசையேற்றங்களுக்கு (பம்புசெட்டுகளுக்கு) மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை, வீதி விளக்குத் திட்டத்தோடு இணைத்து விரைவு படுத்தி நிறைவேற்றித் தரவேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இம் மாநிலத்திலுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின்படி ரூ. 12.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு 3,000 ஊர்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிப்பதும் 55,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதும் இதற்காக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின்படி புதுக்கோட்டை கோட்டத்தில் 1969-70 நடப்பு ஆண்டில் 84 ஊர்களுக்கும், 330 சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிக்கவும், 723 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கோட்